

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.11.2025) தலைமைச் செயலகத்தில், பாடகர் டாக்டர் சீர்காழி சிவ.சிதம்பரம் அவர்கள் சந்தித்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மந்தைவெளி கிழக்கு வட்ட சாலைக்கு தனது தந்தை இசைப்பேரறிஞர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டார். உடன், த.வேலு எம்.எல்.ஏ., சீர்காழி சிவ.சிதம்பரம் மகன் வருண் கோவிந்த் ஆகியோர் உள்ளனர்.

மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் மாமாவும் ஆகிய முன்னாள் வேளாண் விற்பனை குழு தலைவர் கோ.தெட்சிணாமூர்த்தி அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்டக் கழகத்தின் சார்பில் கோவில்திருமாளத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் வே.மனோகரன், கேப்டன்.எஸ்.எம்.செல்வராஜ், புலிவலம். ஏ.தேவா, சேகர் ஆர்.கலியபெருமாள், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ. எஸ்.குமார், இலக்கிய அணி பாலமுத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவில் ஒரு பகுதியாக வள்ளுவர் கோட்டத்தில் சென்னை முற்போக்கு புத்தகக் கண்காட்சி 2025 நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் (13.11.2025) மாலை நேர நிகழ்ச்சியாக துரை சந்திரசேகரனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி மற்றும் திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதியின் உரைவீச்சும் நடைபெற்றன. வாசகர்களும், பொதுமக்களும் ஆர்வத்துடன் பங்கேற்று நிகழ்வுக்கு வரவேற்பளித்தனர்.

கழக சட்டத்துறை சார்பில்

தமிழ்நாடு சட்டத்துறை மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள்- வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம்: ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

சென்னை, நவ.15-

கழக தலைவர் - முதலமைச்சர், அவர்களின் ஆணைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு கழக சட்ட துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி., கழக சட்டத் துறை இணைச் செயலாளர், வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், கழக சட்ட துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் ஆர்.விடுதலை தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை ஆற்றுகிறார்.

அது சமயம் சட்ட துறை மாநில நிர்வாகிகள் ,மாவட்ட அமைப்பாளர்கள் (DLC), ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் இரண்டு CLC கள் மாவட்ட அரசு குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள்(PP) மாவட்ட அரசு உரிமையியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள் (GP) ஆகியோர்கள் பங்கு பெறும் ஆலோசனை கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நாளை (16.11.25) காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

குறிப்பு: மேலே குறிப்பிட்ட அனைவருக்கும் தனி தனியாக வருகை பதிவேடு வைக்கப்பட இருப்பதால் அனைவரும் தங்களுடைய வருகையை உறுதிப் படுத்தி கொள்ளவும்.

அதுசமயம் மேலே குறிப்பிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கழக சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

“கற்றறிந்தோர் பார்வையில் கலைஞர் “ நூலில் இடம்பெற

கல்வியாளர்கள் - ஆராய்ச்சியாளர்கள் கட்டுரைகளை அனுப்பலாம்!

சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் வேண்டுகோள்!

சென்னை, நவ.15-

சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சரும், தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் மூத்த தலைவருமான கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு சென்னை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் “கற்றறிந்தோர் பார்வையில் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி” என்ற நூலினை கொண்டு வர திட்டமிட்டுள்ளோம்.

இந்த நூலில் கலைஞருடைய பணியைப் பார்த்து வியந்த தருணங்கள் கலைஞரால் கொண்டு வரப்பட்ட, நிறைவேற்றப்பட்ட கல்வி, உயர் கல்வி சமூக நிதி திட்டங்கள், கலைஞர் எழுதிய நூல்கள், கலைஞரின் தமிழ் வளர்ச்சி திட்டங்கள், கலைஞர் ஆற்றிய உரைகளின் மூலமாக கல்வி, சமூக நீதி பற்றிய கருத்துகள், சட்டமன்றத்தில் கலைஞரால் கொண்டு வரப்பட்ட முற்போக்கு சட்டங்கள், உயர்கல்வி, பள்ளிக் கல்வி ஒதுக்கீடுகள், சமூக நீதி எனப் பல்வேறு துறைகளில் கலைஞர் ஆற்றிய பணிகள், கலைஞருடன் பழகிய, விவாதித்த தருணங்கள் என பல்வேறு கருத்துகள் குறித்து நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள், துணைவேந்தர்கள்,

தமிழ் அறிஞர்கள், புலவர்கள், கல்வி நிலையங் களை நிறுவியவர்கள், ஆராய்ச்சியாளர்கள், டாக்டர் பட்டம் பெற்ற எவரும், அவரவர் பார்வையில் ஏதாவது ஒரு தலைப்பில் கலைஞரைப் பற்றி கட்டுரைகளை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ 4 பக்கத்துக்கு குறையாமல் 10 பக்கத்துக்கு மிகாமல் ஏ4 (A4 SIZE) பக்க அளவில் தட்டச்சு செய்து பயன்படுத்திய பாண்டை(FONT)யும் சேர்த்து டிசம்பர் 10-ஆம் (10.12.2025) தேதிக்குள் சென்னை வளர்ச்சிக் கழக அலுவலகத்திற்கு இ-மெயில் (MDS_1981@YAHOO.COM) மூலமாக எழுதி அனுப்புமாறு சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் கேட்டுக் கொண்டுள்ளார்.

பண்டித ஜவஹர்லால் நேரு 137வது பிறந்தநாள்!

திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, நவ.14–

பண்டிதஜவஹர்லால்நேருஅவர்களின் 137ஆவது பிறந்த நாளான நேற்று (14.11.2025) அமைச்சர் பெருமக்கள் கத்திப்பாரா சந்திப்பில் உள்ளஅவரதுதிருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்தியத் திருநாட்டின் முதல் பிரதமராகத் திகழ்ந்த பண்டித ஜவர்ஹலால் நேரு அவர்களின் 137ஆவது பிறந்தநாளானநேற்று(14.11.2025) காலை 09.30 மணியளவில் தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள் சென்னை, கிண்டி, கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள அவர்தம் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர்.

பண்டிதஜவஹர்லால்நேருஅவர்கள் 1889ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் நாள் பிறந்தார். தம்மடைய பள்ளிப்படிப்புமுதல்பாரிஸ்டர்பட்டம் வரைஇங்கிலாந்துநாட்டிலுள்ளபுகழ்மிக்க பள்ளிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பயின்றார். அவர் படிக்கின்ற காலத்திலேயே உலக அரசியலில் அதிக கவனமும், குறிப்பாக,அடிமைப்பட்டிருந்தநாடுகளின் மீது அதிக அக்கறையும் கொண்டிருந்தார். 1919ஆம் ஆண்டு நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைச் சம்பவம் அவரது தீவிர அரசியல் வாழ்க்கைக்குக்காரணமாகஅமைந்தது.

பண்டிதஜவஹர்லால்நேருஅவர்கள், ”நவீன இந்தியாவின் சிற்பி என்று நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்பட்டார். அண்ணல் காந்தியடிகளின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவர்களில்ஒருவராகஉருவெடுத்தார். சுதந்திரப் போராட்ட காலத்தில் அந்நியநாட்டின்அடிமைத்தனத்தை எதிர்க்கின்ற வகையில், ஆங்கிலேய அரசுக்கு எதிராக அடுத்தடுத்து நடைபெற்றபல்வேறுதொடர்போராட்டங்களில் ஏறத்தாழ 9ஆண்டுகாலம் சிறைத் தண்டனை பெற்றார்.

சிறையில் இருந்த நாட்களில் அவர் எழுதிய ” உலக வரலாற்றின் துளிகள், ”இந்தியாவின் தரிசனம், ”விடுதலையை நோக்கிஆகியநூல்களும், சுதந்திர தாகம் குறித்துத் தம் மகள் இந்திராகாந்தி அவர்களுக்கு எழுதிய 137 கடிதங்களின் தொகுப்புகளான ”சுயசரிதை நூலும் இன்றளவும் உலகளவில் பேசப்படும் சிறந்த நூல்களாகத் திகழ்கின்றன.

பண்டிதஜவஹர்லால்நேருஅவர்கள் இந்தியத் திருநாட்டின் முதல் பிரதமராக ஏறத்தாழ 17 ஆண்டு காலத் தொடர் ஆட்சியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள், கலப்புப் பொருளாதாரக் கொள்கை, பஞ்சசீலக் கொள்கை, அணிசேராக் கொள்கைபோன்றமுக்கியக்கொள்கைகளை வகுத்தார். மேலும், அறிவியல், அணுசக்தி, விண்வெளி ஆராய்ச்சி, வேளாண்தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவைகளுக்குக் கட்டமைப்புகளை உருவாக்கினார்.

பண்டிதஜவஹர்லால்நேருஅவர்களதுஆட்சியில், நெருக்கடிக்காலத்தில் மாநிலங்களின் ஒற்றுமை மற்றும்நலன்கருதிக்கொண்டுவரப்பட்ட மாநில மறுசீரமைப்பு, அலுவல் மொழிஆணையம்ஆகியவைகுறிப்பிடத்தக்கவரலாற்றுநிகழ்வுகளாகும். மொழிவாரியானபல்வேறுமாநிலங்களைக் கொண்டிருந்த நம் இந்திய தேசத்தின்ஜனநாயகமாண்பினைக் கட்டமைப்பதிலும், அதனை நிலைநாட்டுவதிலும்உறுதியாகஇருந்தார்.

பண்டிதஜவகர்லால் நேரு அவர்கள் இளைஞர் சமுதாயம் கற்றறிவதன்மூலமேநாட்டின்வளர்ச்சியினை மேம்படுத்திட இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, கல்விக்கான அரிய பல திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்திய பெருமைக்கு உரியவர்.அன்னாருடையதியாகத்தையும், திறமையான நிருவாகத்தையும் பறைசாற்றுகின்ற வகையில், இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ள கல்வி நிலையங்கள், விளையாட்டு அரங்கங்கள், நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பலவற்றிற்கு அவர் பெயர் சூட்டப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், ”பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அறிவாற்றலுடன் நல்ல இதயத்தைக் கொண்டிருந்த பெருமகன்; குழந்தையின் மழலையைக் கேட்டதும் தாமும் குழந்தையாகிவிடும் இயல்பினையும், ஏழைகள் வதைபடுவதைக் காணும்போது அவர்கள் நிலையெண்ணிக் கண்ணீர் சிந்திடும் கனிந்த இரக்கத்தினையும்: நல் இதயத்தினையும் பெற்றவர் என்று பெருமிதம் பொங்கிடக் குறிப்பிட்டு உள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்1970ஆம்ஆண்டில்,நேருகண்ட ஜனநாயகம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையில்,

“நீதிக்குஎதிரானவற்றையெல்லாம்
நேர்நின்றுஎதிர்த்ததாலே நேருவானார்.
இந்திய நீள் எல்லைக் கோடுதனைப்
பெரும் பகைவர் கடந்த போது
என்ன நேருமோ என்றேங்கிய
இந்திய மக்கள் நெஞ்சின் துயர் துடைத்து
ஏதுவும் நேராது நான் இருக்கு மட்டும்
எனச் சொல்லி நேருவானார்!“

எனக் கவிபாடி பண்டித நேரு அவர்களின்பெருமைகளைப்போற்றியுள்ளார்.

பண்டிதஜவஹர்லால்நேருஅவர்கள், தம்வாழ்நாளின்இறுதிக்காலம் வரையில் குழந்தைகள், இளைஞர் நலன், அவர்களின் கல்வி வளர்ச்சி ஆகியவற்றிலேயே அதிகம் நாட்டம் கொண்டவராக இருந்தார். ஆசிய ஜோதி, மனிதருள்மாணிக்கம்என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், குழந்தைச் செல்வங்களின் மீது கொண்டிருந்த அளவற்ற அன்பு காரணமாக அன்னாரது பிறந்தநாளானநவம்பர்14ஆம்நாள் குழந்தைகள் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடுஅரசின்சார்பில்ஆண்டுதோறும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்த தினமான நவம்பர்14–ஆம்நாள்அரசுவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படிஇந்தஆண்டுநடைபெறும் நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர்அலுவலர்கள்கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெங்களூரு - மைசூரில் படிக்கும்

தமிழ்நாட்டைச் சேர்ந்த 29 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கி - கலந்துரையாடினார்!

பெங்களூரு, நவ.15-

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிப்ட் (NIFT பெங்களூரு) மற்றும் RIE மைசூரில் உயர் கல்வி பயிலும் 29 மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடி, மடிக்கணினிகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசுப் பள்ளிகளில் கல்வி பயின்ற 2025ஆம் ஆண்டைச் சேர்ந்த 29 மாணவர்கள் தற்போது முன்னணி கல்வி நிறுவனங் களான நிப்ட் (NIFT பெங்களூரு) மற்றும் RIE மைசூரில் உயர் கல்வி பயின்று வருகின்றனர். பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிப்ட் கல்லூரிக்கு நேரில் சென்று மாணவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், தங்கள் கனவுகளை துணிச்சலாகவும் சிந்தனையை படைப்பாற்றலாகவும் வளர்க்குமாறு ஊக்கமளித்தார். மேலும், மாணவர்களின் கல்விப் பயணத்தை வலுப்படுத்தும் வகையில் மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் NIFT(BANGALORE) இயக்குநர் யாதிந்திரா, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா. சுதன் ஆகியோர் உடனிருந்தனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில் தொடர் விளையாட்டுப் போட்டிகள்!

மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கரூர். நவ.15.

கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட திமுக சார்பில் ஆண், பெண்களுக்கான சிலம்பம் போட்டிகள் இன்று நடைபெறுகிறது.மேலும் கபடி, சதுரங்கம், கைப்பந்து, இறகுபந்து, கால்பந்து, சைக்கிள், ஸ்கேட்டிங், மாரத்தான், கிரிக்கெட் என தொடர் விளையாட்டு திருவிழாவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என மாவட்டக் கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49 வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட திமுக சார்பில் கரூர் மாவட்ட அளவில் பெண்களுக்கான சிலம்பம் போட்டி 2025: நவம்பர் 15ம் தேதி (இன்று) காலை 8.30 மணிக்கு கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

இதேபோன்று கரூர் மாவட்ட அளவில் ஆண்களுக்கான சிலம்பம் போட்டி 16ம் தேதி (ஞாயிறு) காலை திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது. இரு போட்டிகளையும் கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்குகிறார். பெண்கள் அணிக்கும், ஆண்கள் அணிக்கும் தனித்தனியாக பரிசுத்தொகை தலா ரூ. 7 லட்சத்து 20 ஆயிரம் வழங்கப்படுகின்றது. ஆண் பெண் அணியினருக்கு 14, 17, 19 வயதினருக்கான போட்டிகள். பொதுப் பிரிவினருக்கான (வயது வரம்பு கிடையாது) போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் தலா மூன்று எடை பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு எடை எடை பிரிவில் வெற்றி பெறுவோருக்கு, முதல் பரிசு தலா ரூ. 25 ஆயிரம், இரண்டாம் பரிசு தலா ரூபாய் 20,000 மூன்றாம் பரிசு தலா ரூபாய் 15,000 மற்றும் பரிசு கோப்பைகள் தனித்தனியே வழங்கப்படுகின்றன. இரு நாட்களிலும் போட்டிகளை கரூர் மாவட்ட கழக செயலாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ தொடங்கி வைத்து பரிசுகளை வழங்குகிறார். போட்டியில் கலந்து கொள்பவர்கள் சிலம்பம் கொண்டு வர வேண்டும். தற்காப்பு உபகரணங்கள் தங்களே கொண்டு வர வேண்டும். முதல் சுற்று நாக்அவுட் முறையில் நடைபெறும். வெற்றி பெற்றவர்களை வைத்து தொடர்ந்து போட்டிகள் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர் விளையாட்டுப் போட்டி திருவிழா

இதுகுறித்து மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி விடுத்துள்ள அறிக்கையில்,

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் தமிழ்நாட்டிலிருந்து உலகத்தரத்திலான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் முனைப்பில் அயராது உழைத்திடும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், நமது இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மதிப்பில் மொத்த பரிசுத் தொகையுடன், வருகின்ற நவம்பர் 15 முதல் டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப்பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மாரத்தான் மற்றும் கிரிக்கெட் என தொடர் விளையாட்டு போட்டி திருவிழா நடைபெற இருக்கின்றது.

போட்டிகளைப் பற்றிய விபரங்கள்:

போட்டி : சிலம்பம் (பெண்கள்)
நாள் : 15.11.2025 சனிக்கிழமை
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 7,20,000
போட்டி : சிலம்பம் (ஆண்கள்)
நாள் : 16.11.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 7,20,000
போட்டி : கபடி (ஆண்கள்)
நாள் : 22.11.2025 சனி மற்றும் 23.11.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 2,15,000
போட்டி : சதுரங்கம் (ஆண்கள் & பெண்கள்)
நாள் : 29.11.2025 சனிக்கிழமை
நேரம் : காலை மணி 8.30
இடம் : பிரேம் மஹால், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 6,00,000
போட்டி : ஸ்கேட்டிங் (ஆண்கள் & பெண்கள் மாநில அளவில்)
நாள் : 29.11.2025 சனி மற்றும் 30.11.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 6.00
இடம் : PS SPORTS ARENA, வெண்ணைமலை.
பரிசுத்தொகை : ரூ. 6,00,000
போட்டி : சைக்கிள் பந்தயம் (ஆண்கள்)
நாள் : 29.11.2025 சனி மற்றும் 30.11.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 85,000
போட்டி : கபடி (பெண்கள்)
நாள் : 07.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 2,15,000
போட்டி : மராத்தான் (ஆண்கள் & பெண்கள்)
நாள் : 07.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 6.00
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 2,68,000
போட்டி : கிரிக்கெட் (ஆண்கள்)
நாள் : 13.12.2025 சனி முதல் 21.12.2025 ஞாயிறு வரை
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 2,05,000
போட்டி : இறகுப்பந்து (பெண்கள்)
நாள் : 13.12.2025 சனி
நேரம் : காலை மணி 8.30
இடம் : ஆபிஸர்ஸ் க்ளப், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 4,80,000
போட்டி : இறகுப்பந்து (ஆண்கள்)
நாள் : 14.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : ஆபிஸர்ஸ் க்ளப், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 4,80,000
போட்டி : TURF கிரிக்கெட் (ஆண்கள்)
நாள் : 14.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : விரூ டர்ப், காந்திகிராமம், கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 70,000
போட்டி : TURF கால்பந்து (ஆண்கள்)
நாள் : 14.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : FOURTY ELEVEN TURF, பெரியார் வளைவு, கரூர்.
பரிசுத்தொகை : ரூ. 70,000
போட்டி : வாலிபால் (ஆண்கள்)
நாள் : 28.12.2025 ஞாயிறு
நேரம் : காலை மணி 8.30
இடம் : திருவள்ளுவர் மைதானம், கரூர்..
பரிசுத்தொகை : ரூ. 1,72,000

கரூர் மாவட்ட சொந்தங்கள் அனைவரையும் கலந்துகொள்ளவும், கண்டுக்களிக்கவும் அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு செந்தில் பாலாஜி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.